2047 No. 557
5-6
2390

எந்நூலுக்கும் இந்நூலே மூலம்

ஆதியும் உலக இணைப்பும்

(முதல் அத்தியாயம்)

ஒருமொழி

(மூன்றாவது அத்தியாயம்.)

ஞானவள்ளல்

பரஞ்சோதி மஹான்

அருளியது

2390
KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

பரிபூரண பரஞ்சோதி

உயர்ஞான சபையோரால்

வெளியிடப்பட்டது.

ACC. NO: 2390
R.65

டாம் பதிப்பு

உரிமைப் பதிப்பு (Regd. ACT—XXI of 1860)
(Copy Right Reserved.)

1946 - 025 Rs/0.50

கவனிப்பு

உலக நல்லடியார்களே! பரிபூரண பரஞ்சோதியின் உயர்ஞான சபை, ஞான வள்ளல் பரஞ்சோதி மகான் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்று, 1942ம் ஹூ மேமீ 18-ந்வ 1860 வருஷத்திய (Societies Act XXI) சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது. நன்மைக்கு ஆளாவோர் நாளுக்குநாள் பெருகி பல மாகாண ஊர்களில் சபைகள் நிருவப் பெற்று வருகின்றன.

தன்னைத்தான் அறிந்து தன் சக்தியை அபிவிருத்தி செய்து அன்றாட வாழ்க்கையில் பிரயோகித்து, பேரின்பமாய் பிறவியின் பெரும் நோக்கை முடித்து, ஐக்ய முக்தியடைவது இச்சபையின் நோக்கம்.

'இருளே பூரணம்—உயிர் இருப்பது இருளில்—உயிராயிருப்பது நினைவு—உயிரின் ஒத்தாசையாயுள்ளது தன் தொனி—உயிரின் பொருளாயுள்ளது அக்கினி அல்லது ஜோதி—உயிரின் நிர்வாகி அறிவு—அடக்கமும் அணுவில் விரிந்ததும் அணுவால்—அறிந்ததும் அணுவினுள் ஆதி மெய்யுணர்வால் என்பது இச்சபையின் தத்துவம்.

25 வயதிற்குமேல் 70 வயதிற்குட்பட்டவர்கள் பெரிதும் இல்லற வாசிகளாயும், திடகாத்திர மேனி உள்ளவராயும், சீர கேடற்றவராயும், இருந்து, சபையின் 10 நிபந்தனைகளின்படி நடந்துக் கொள்பவர்கள் இச்சபையில் அங்கத்தினர்களாகச் சேரலாம்.


அறிவாளிகளே! அறிவைக் கடந்த தன்னிலையடைந்துக் கொள்ளுங்கள்.


நல்லடியார்களே! தன்னிலையடைந்து தன்னறிவைப் பிரகாசித்துக் கொள்ளுங்கள்.

No. 55/

5-6

M. A. A. Annamalai,
PALLATHUR,
RAMNAD DT.





ஞானவள்ளல்-பரஞ்ஜோதி மஹான்

M. P. P. Annamalai,
PALLATHUR,
RAMNAD DT.

ஆதியும் உலக இணைப்பும்

1. "இருளே பூரணம் - உயிர் இருப்பது இருளில் - உயிராய் இருப்பது நினைவு - உயிரின் ஒத்தாசையாயுள்ளது தன் தொனி - உயிரின் பொருளாயுள்ளது அக்கினி அல்லது ஜோதி - உயிரின் நிர்வாக அறிவு - அடக்கமும் அணுவில் - விரிந்ததும் அணுவால் - அறிந்ததும் அணுவினுள் ஆதிமெய்யுணர்வால்."

2. "முப்பாழுக்கும் அப்பால் சென்று, அப்பாலுக்கப்பால் பெரும்பாழ் இருள் என்றறி."

3. "இருளில்லா வித்தில்லை. இருளில்லா ஜீவன் இல்லை. இருளில்லா லோகமில்லை. இருளில்லா இடமில்லை. இருளில்லையேல் ஏகமும் இல்லையே இல்லை."

இருள்

4. முதன் முதலாயுள்ளதும், முடிவாய்க் கடைசியாயுள்ளதும் இதுவே. சூனியமாய் உள்ளதும், யாராலும் படைக்கப் படாததும், அனாதியாய் உள்ளதும், அந்தமில்லாததும், அசைவற்றதும், ஆசையற்றதும், அளவிட முடியாததும், எல்லாம் பிறந்த இடமும் மறைந்த இடமும் இதிலேயே. எல்லாவற்றிலும் உள்ளும் புறமும் இருப்பதும், எப்பொழுதும் அழியாததும், அழிக்கப்பட முடியாததும், மரியாதையற்றதும், மரியாதைக்குரிய எல்லா உருவத்திற்கும் இருப்பிடமும், அதனால் ஒன்றும் செய்ய முடியாததும், அதிலிருந்து எல்லாம் செய்யத் தகுதியுள்ளதும், கை கால் தோற்ற உருவ மில்லாததும், ஆனதோர் தோற்றப்பொருளெல்லாம் இதன்னுள் அடங்கியதும், நம்முள் உள்ளதும், நமது உயிர் இருப்பதும், சத்தியாய் உள்ளதும், நினைவாகிய உயிர் என்னும் சக்தியின் இருப்பிட

மாயுள்ளதும், நிரந்தரமாய், எங்கும் பரிபூரணமாய் பராபரமாயுள்ளதும், முப்பாழுக்கும் அப்பால் சென்று அப்பாலுக்கும் அப்பால் உள்ளதும் நமது இருளே இருள். இதுவே பரிபூரணமா யுள்ளது. அரூப ரூப நிலையில்லா தது. இதைக் கடவுள் என்றோ பிரம்மம் என்றோ சொல்லவே கூடாது. (இது முதல் தத்துவமாகும்.)

5. உதாரணம் :—ஒரு இருட்டறையில் வெளிச்சம் புகுமே ஒழிய இருள் புகாது. வெளிச்சம் உள்ள அறை யில் இருட்டு புகாமலே வெளிச்சம் மறைந்ததும் யதார்த்த இருட்டு அங்கேயே இருக்கிறது. அப்போது அவ் வெளிச் சத்தினுள்ளும் இருட்டு இருக்கிறது. சரீர உள் அவய வங்களைச் சூழ்ந்திருப்பதும், அவ்வவயவங்களினுள் நிறைந் திருப்பதும் இருளே. ஆகையால் இருட்டை விலக்கியது எதுவும் இல்லை.

6. இருள் என்றால் அஞ்ஞானம் என்றோ, மாயை என்றோ சொல்லவே கூடாது. ஒரு மனிதன் தன் அறிவில் மேல் அறிவைத் தெரியாத நிலைமையே அஞ்ஞானம் என் பது. அவனிடத்திலும் ஒருவித அறிவு உண்டு. சரீரத் தில் இரத்தச் சுழல் உள்ளவரையிலும் மாயை என்ற வியாபகம் யாருக்கும் உண்டு. அதை அறிந்து, சரி, சரி யன்று என்று தெரிந்து முடித்துக்கொள்பவரே அறிவாளி யாவார். மாயை இல்லையேல் அறிவுக்கு வேலையில்லை. அறிவின் உயர்வு இல்லையேல் ஞானமுடிவு இல்லை. ஞான முடிவு இல்லையேல் தன்னைத்தான் அறிந்ததில்லை. அதே போல் எல்லா மத, வேத கொள்கைகளும் இல்லையேல் ஞானந்தேடும் மார்க்கமில்லை ; ஞான மில்லையேல் மதவேத கொள்கைகளின் முடிவே இல்லை.

உதாரணம் :—பெரும் நதிகளின் முடிவு கடலில் சேர் வது போன்று.

7. நினைவே ஆணாய், அந்நினைவின் தொனியே பெண் ணாய், அனாதியாய் உள்ள இருளை அறை வீடாய்க் கொண்டு, ஆணும் பெண்ணும் அமர்ந்து கலந்த மோக இன்பத்தின் வடிவமே அருட் பெருஞ்சோதி அக்கினியாய்- அதன் சிறப்பும், சிரிப்பும் மலராய் - அறிவாய், அணுக்

களாய் ஆகியது. ஆகையால் இருள் எங்கும் பூரணமா யுள்ளது.

8. இருளிலேயே எல்லாம் உற்பத்தி. "இருளால் உற்பத்தியா ?" என்று கேட்டால் இல்லவே இல்லை. இருளில் இருந்த ஆதி என்ற நினைப்பால்தான் எல்லாம் உற்பத்தி. அந்த நினைப்பு எத்தகையது ?

9. "நானே நீ ; நீயே நான் ;
நானும் நீயும் நானே நான்."

இருளில் நினைவு

10. நான் என்பவனும், தான் என்பவனும், யாரா லும் படைக்கப் படாதவனும், எல்லாவற்றையும் படைத் தவனும், உருவமில்லாதவனும், பின் உருவமாகியவனும், அல்லா, ஆண்டவன், கர்த்தா, கடவுள், சக்தி, அவன், இவன், இது, அது என்பவனும், இறந்து மறைந்து இற வாதவனும், எப்போதும் இருப்பவனும், நிமூலமற்றவனும், இருளில் அருப சாயையாய் இருப்பவனும், மற்ற எல்லா பேர்நாமங்களும், எல்லாவற்றிற்கும் ஜீவனுய் - உயிராய் உள்ளவனும், பூரண இருளில் இருந்தவனும், இருப்ப வனும், இருளில் இருந்து பலவகைப் பொருள்கள் சிருஷ் டித்து நிர்வாகம் நடத்துபவனும், அணுவில் உள்ளவனும் நான், நாம் ; நமது நினைவே நினைவு.

11. இந்த நினைவு அருப, ரூப நிலையுள்ளது. பக்தர் கடவுளாயும், யோகிகள் குண்டலி சக்தியாயும், ஆராய்ச்சியாளர் ஏகாக்ர சக்தியாயும் இதை வருணிக் கிருர்கள். ஞானி, தன்னிலையுடையோர் நான் என்பர். உதாரணம்: பெரும் பட்டணத்தை நாடி நடப்போன் அப்பாதையில் எந்த ஊர் சமீபத்தில் வந்திருக்கின்ருனே அந்தவூர் பேருடன் சேர்த்து அப்பாதையைச் சொல்வது போல் ஆகும். (இது இரண்டாவது தத்துவமாகும். கடவுள் என்ற தத்துவத்தில் இதுவே முதல் தத்துவ மாகும்.)

12. ஒரு மனிதனது நினைப்பின் சக்தி ஒரு சிறு எண்பதினுபிரங் கோடி மைல் வியாபித்திருக்கின்றது.

அதை அறியக் கூடிய அறிவுடைய மனிதனுக்கு அறிவி னுடைய வேகம் ஒரு நொடிக்கு இருபதினாயிரம் மைலுக்கு மேல் வேகமுள்ளது. மற்றொரு வகையில் சொல்வதென் றால், அறிவறிந்தவர்களுடைய நினைப்பின் வியாபகம் எங் கும் நிறைந்திருக்கின்றது. இந்த நினைப்பின் அரூப ரூபம்—உணர்வால், அறிவின் அபிவிருத்தியைக் கொண்டு அறிந்தவர்கள் தான், தான் தன்னை யறிந்தவர்களென் றும், கடவுள் என்றும் சொல்லத் துணிந்து கொள் வர். அதனால்தான் நான் ஒரு சமயத்தில் "என் இருதய மலர்களே! ஒரு சில சமயத்தில் நான் தீர்க்க தரிசிகளில் ஒருவனாகவும் இருந்துபேசுவேன்; மற்றோர் சமயத்தில் ஞானிகளில் ஒருவராயும் இருந்து பேசுவேன். என்சதாநிலை ஈசனுடைய நிலை எதுவோ அதுவே யாகும். ஆகையால் அந்தந்த சமயங்களை அனுசரித்து நடந்து கொள்வதில் நீங்களும் அந்நிலை யுடையவர்களே" என்று சொல்லியிருக்கின்றேன்.

13. ஆகையால், உலக நல்லடியார்களே! வணங்கு இன்றவன் யார்? வணக்கத்திற்குரிய ஈசன்யார்? வணக்கத் தின் வணக்கத்தால் வணங்கி வணங்கி வணக்கத்தின் முடிவே வணங்கியவன் எவனோ அவனே வணக்கத்திற் குரிய ஈசன். இது போன்று அறிந்து மாறினாலே முக்தி.

அறிவின் ஆராய்ச்சியோடு உயர்வின் வணக்கம் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டும்.

14. காணும் பொருளெல்லாம் கடவுள் மயம்தான் - (பக்தன்) காணும் பொருளெல்லாம் அணுக்களின் சேர்க்கைதான் - (ஆராய்ச்சியாளன்) காணும் பொரு ளெல்லாம் காண்பவரின் அறிவில்தான் - (அறிவாளி) காணக் காணக் கடவுளும் காண்பவன்தானே - (தன்னிலை யடைந்தோன்).

15. இந்த ஆதி என்ற நினைவு முதன் முதலில் எப்படித் தோன்றியது என்றால், தன் தொனியில் மறதி யாய்க் கிடந்த இந்த நினைப்புக்குத் தன்னுள் உள்ள சப் தத்தால் சலனமேற்பட்டு விழிப்பேற்பட்டது. சப்தம் அல்லது தொனி எத்தகையது என்பதை, "உணர்வும் தவக் கனலும்" என்ற அத்தியாயத்தில் பார்க்க.

நினைவில் தொனி

16. தன் தன் மதவேத ஒழுக்க ஜெபதபங்களெல்லாம் தன்னுள்ளுள்ள தன்தொனியென்றறி.

17. நாதம் என்பதும், ஓங்காரம் என்பதும் நாதத் தொனி என்பதும் மகாரமென்பதும் எல்லா மந்திர ஜெபங்களாய் வேதங்களாய் உள்ளதும் இதுவே. சுகத்திற்குரியதும் நினைப்பின் நிர்வாகம் எங்கெங்கு உள்ளதோ அங்கெல்லாம் உள்ளதும் இதுவே. மௌனமாய் உள்ளதும், மௌனத்திற்குள் முழக்கமாயுள்ளதும், நினைப்பிற்கு அவாவுண்டாக்கியதும், பெரும் ஆலோசனைக்குரியதும், நினைப்பிற்கு அதிக வேகம் கொடுத்ததும், உருவத் தோற்றங்களில் எல்லாம் உள்ளும் புறமும் நிறைந்தும், உயிரோடு இருந்து உருவத்தை வளர்ப்பதும், பிறக்க வைத்ததும், பிறவியின் முடிவுக்கு ஒத்தாசை யாயுள்ளதும், உயிருக்கு ஆதரவாயுள்ளதும் அணுவில் உள்ளதும் நமது நாதத் தொனியே தொனி. இது அரூபத்தில் முழக்க நிலையுள்ளது. (இது தத்துவத்தில் மூன்றும் தத்துவமாகும்.)

18. மெய்யுணர்வாளர்களே! ஞானத்திற்கு உணவு இராகமாகும். ஆகையால் உங்களின் ஓய்வு காலத்தை அறிவை ஆராய்வதிலும், இராகமான இடங்களிலும், நல்ல பாடல்களுள்ள இடங்களிலும் கழித்தல் வேண்டும். அப்படி நடந்து கொள்வதில் தவப்பற்றுதலும், அறிவினுடைய அபிவிருத்தியும் அதிகமாகும், நீங்கள் படிப்பதை விடபிறர் படிப்பதையும். பாடுவதையும், சிறிது தூரத்தில் இருந்து கேட்பது மிக உத்தமம். நீங்களும் பாடுவதென்றால் சிறிய நல்ல இராகத்தோடு பாடிக் கொள்ளவும்.

19. இதை நீங்கள் ஒரு மொழியினுள் அறிந்ததன் பயனே மரம், செடி மற்றதன் பாஷை அறிந்தீர்கள். அத்துடன், உலகங்களில் எங்கும் நிறைந்த திருவிளையாட்டுகளாலும், நீங்கள் அடைந்திருக்கும் பெரும் மெய்யுணர்வின் பதவியைப் பற்றியும், அப்பெரும் ஸ்தானத்தைப் பற்றியும், உங்களின் முடிவைப் பற்றியும் மரம், செடி, கொடி,

புல், பூண்டு மற்ற ஜீவ ஜந்துக்களும் மிகத் திருப்தி யடைந்து திருப்புகழாய்ப் பாடி. உங்களைத் திருப்திப் படுத்தியும், நீங்கள் அடைந்த பெரும் பதவியைத் தேடி எக்கங் கொண்டு வளர்கின்றன. வளர்ந்து வருகின்றன. (இதன் தன்மைகளை 'ஒரு மொழி'யில் அவசியம் பார்க்கவும்.)

20. ஆதி என்ற நினைவு தன் தொனியால் வேகம் அதிகரிக்க அக்கினியாக விளைந்தது. அந்த அக்கினி எத் தகையது?

தொனியால் அக்கினி அல்லது அருட்பெருஞ்சோதி

21. அகண்ட இருளில், ஆதியும், அதனின் தொனியும் அருட்பெருஞ்சோதியும், அணுவில் ஒடுங்கி, அணுவாய்ப் பிரிந்து அகில லோகங்களாய் நிறைந்ததின்பின், ஆதியால் அகண்ட இருளில், அணுவைத் தரித்து, அணுவைத் துளைத்து அதில் உருவானது நாம்.

22. ஜோதி சொரூபமென்பது, அக்கினி சொரூபமே. நினைப்பின் சொரூபமும், நினைப்பின் பீடமும், மகா காரணம் என்பதும், அளவிடமுடியாத ரூபம் என்பதும் அதுவே. பரிசுத்த வெண்மையாயுள்ளதும் வித்தாய் விளைந்ததும் எல்லா ஜீவாத்மாக்களுக்கும் இசைந்து அந்தந்த ஆத்மாக்களுக்குரிய வித்தாய் விளைவதும் அதுவே. இருளில் வெளிச்சமாய் இருப்பதும், இருளில் நிழலாய் சாயையாயுள்ளதும், தேஜஸாயுள்ளதும், தேஜஸுக் குரியதும், எல்லா ஜீவனுக்குள்ளுள்ள பொருளும், உயிருக்கு ஆதரவாய் உள்பொருளாயுள்ளதும், சுக துக்கத்திற்குக் காரணமாயுள்ளதும் அதுவே. உருவத் தோற்றங்களுக்கு மூல நினைப்பின் ரூப உருவமாயுள்ளதும், கருவாயுள்ளதும் குரு ரூபமாயுள்ளதும், அணுவாய்ப் பிரிந்ததும், அணுவில் உள்ளதும் பிரிந்தும் அளவில் குறையாததும் அதுவே. இது வரையும் இனியும் அழியாததும் பின் அணுவிற்கு முடிவாயுள்ள இடமும் நமது ஜோதி சொரூபமே சொரூபம். (இது அரூப ரூப நிலை இரண்டும் உடையது. இது தத்துவத்தில் நான்காம் தத்துவமாகும். இதனுடைய விபரம் "பரஞ்சோதி"யில் பார்க்கவும்.) இவை எப்படி உற்பத்தியாகின?

ஆதி உற்பத்தி

23. இருளிலிருந்த நினைப்பு, நினைப்புமில்லா அனாதியாய் மறதியாய்க் கால அளவில்லாமல் கிடக்கும்போது, மறதியாய்க் கிடந்த நினைப்புக்கு, நினைப்பின் தன் தொனியால் மறதி தெளிந்தது. தெளிந்ததும், தெளிவு ஏற்பட்டு விழிப்பு ஏற்பட்டது. விழிப்பேற்பட்ட நினைவே நிலவாய் நினைக்க நினைக்க, நினைவின் தன் சக்தியே நிரம்பியதொரு தொனி தன்னைச் சூழ்ந்து கொண்டிருக்க அதுவே அதுவாய் அதுவே அறிந்து, தன் தொனியின் முழக்கத்தின் பேரில் தானேதான் மோகங் கொண்டு, கொண்ட மோகத்தின் வேகத்தால் நினைவே நினைத்து நினைத்து நினைவின் நினைப்பால் நினைவாய்ப் பார்க்கப் பார்க்க, நினைவின் சூட்டால் சிவந்து கனலாய் பஞ்ச வர்ணமாய் அவ்வர்ணங்களின் அநேக தோற்றம் தெரியத் தெரிய, அவா அதிகமாகிக் கடைசியாய் அளவில்லாத பரிசுத்த வெண்மை ஜோதியாகி அச்சொரூபத்தில் அமர்ந்ததும், சந்தோஷங்கொண்டு, அதுவே அதுவாய் அதனின் சொரூபத்தில் இருந்துகொண்டு மகிழ்ந்து, சந்தோஷத்திற்கு மேல் சந்தோஷமாக ஆக, தன் சொரூபத்தில் இருந்து தன் சக்தியால் சொரூபத்தைச் சுற்றி ஆயிரத்தெட்டு மலராய் இதழாய் விரிந்தது; விரிந்ததும், விரித்து மலர்ந்த இதழ் ஒன்றுக்குப் பேரறிவு ஒன்றாய், அந்த அறிவுக்குள் அறிவுகள் அநேகமாய், அறிவுகள் ஒவ்வொன்றிற்கும் குணங்கள் அநேகமாய், குணங்கள் ஒவ்வொன்றிற்கும் சுவைகள் அநேகமாய், சுவைகள் ஒவ்வொன்றிற்கும் தோற்றங்கள் அநேகமாய், தோற்றத்திற்கு அநேக வித வர்ணங்களும் ஆகியபின் தன் மலர் ஆயிரத்தெட்டையும் பார்க்கப் பார்க்க அதன் அழகும், அதிலுள்ள பின்னலான ஜொலிப்பும், அதன் வர்ணமும், பளப்பளப்பின் நிறமும் தான் பார்த்துத் தனக்கே ததும்பிய புன்சிரிப்புடன், தன் சக்தியை மேற்கண்ட எல்லா வகைகளும் அதனதற்குரிய அளவில் நினைப்பின் சக்திகள் வியாபித்ததும், பேரறிவாய் உள்ள மலர் ஆயிரத்தெட்டும் மெதுவாய்த் தன் சொரூபத்தை வலம்புரியாகச் சுற்றியது. சுற்றின் வேகத்தால் ஆதியின் ஏக்கமே பரம ஜீவ ஆத்ம அணுக்களாக ஆகியது; ஆகிறது.

24. இந்த பரமஜீவ ஆத்ம அணுக்களுக்காக வேண்டி ஆண், பெண், அலி என்னும் உருவத் தோற்ற அணுக்களும்; காரண, சூக்கும, ஸ்தூல சரீர அணுக்களும்; பேரறிவு, அறிவு, குணம், சுவை, வர்ணத் தோற்ற அணுக்களும் உற்பத்தியாயின. பின் எல்லா விவரங்களையும் அறிய, அடைய, அனுபவிக்க, விரிக்க, ஒடுக்க, முடிக்கப் பெறுகின்ற வல்லமை இந்த பரம ஜீவ ஆத்ம அணுக்களுக்குரியது. மலரினது சுற்றின் வேகத்தால் இந்த அணுக்கள் எங்கும் ஏகமாய் நிறைகிறது. நிறைந்தது. இந்த ஆத்ம அணுக்கள் முதன் முதலில் காரண லோகத்திலும், பின் சூக்கும தேவர் லோகத்திலும், வெகு காலம் தங்கித் தங்கி இருந்து பின் சரீர லோகங்களுக்கு வந்து அனுபவிக்கின்றன.

ஆயிரத்தெட்டு மலர்

25. இந்த மலரின் உட்பாக இடங்களுக்குக் காரண லோகம் என்று பெயர். மலர் வலம்புரியாகச் சுற்றும் வேகத்தால் மகா காரண ஜோதி சொரூபத்திலிருந்து அணுக்கள் பிரிகின்றன. இந்த இடத்தில் இருந்துதான் பேரறிவு தோன்றுகிறது. இந்த அறிவுக்குள் அடக்கமான அறிவுகள் அநேகமாகும். இந்த மலரும் உருவமுள்ளது. உலகங்களாயுள்ள உருவத் தோற்றங்களும், அவ்வுலகத்திலுள்ள உருவத் தோற்றங்களும், உருவத் தோற்றங்களிலுள்ள அணுக்களும், மற்ற அரூப, ரூபியாயுள்ள அணுக்களும், இந்த மலர் சுற்றும் வேகத்தால் தன்னைத்தான் சுற்றிக் கொண்டு மகா காரணத்தையும் வலம்புரியாகச் சுற்றிக் கொண்டு வருகின்றன. எல்லாம் சுற்றுவதற்குக் காரணம் இந்த ஆயிரத்தெட்டு மலர் சுற்றும் வேகமே யாகும். இதைச் சுற்ருதது ஒன்றுமேயில்லை. (சூாவக்கன் பார்க்க.)

26. இச் சுற்றுலேயே உலகங்களும், நக்ஷத்திரங்களும் ஒன்றுக்கொன்று ஆகர்ஷண சக்தியாய் ஒன்றையொன்று இழுத்துக்கொண்டிருக்கின்றன. உலக நக்ஷத்திர விஷயங்களும், குணங்களும், உட்பிரிவுகளும் ஒவ்வொரு மனித மூளையிலும் அடங்கியிருக்கின்றன.

27. இந்த ஆயிரத்தெட்டு மலரையும், அதனுள் உள்ள அறிவையும் புருக் என்றும்; காமதேனு, மயில்

வடிவமென்றும் சொல்லலாம். சுற்றின் வேகத்தால் தன் சக்தி யெல்லாம் அடங்கிய ஆதியின் ஏக்கம் பரம ஜீவ ஆத்ம அணுக்கள் அநேகம் ஆகியது; ஆகிறது.

அணுவில் அவனும் அவனில் அணுவும்

1. பரம ஜீவ ஆத்ம அணு.

28. பரம ஜீவ ஆத்ம அணு என்பதே மனிதன். இந்த பரம ஜீவ ஆத்ம அணுவிற்குள் எல்லாம் அடங்கி யிருக்கின்றன. இதனுடைய உருவங்கள்:—தேவர்கள்—இவர்கள் மனிதனுக்கு முந்தின நிலையில் உள்ளவர்கள்; பேய், பிசாசு, தேவதை, ஜின் முதலியன—இவைகள் மனிதனுடைய ஆசாபாசங்களாலும், கொடிய செய்கைகளாலும் அவன் இறந்த பின்பு உண்டாகின்றன. (பூத லோகம் பார்க்க.)

2. ஜீவ ஆத்ம அணு.

29. மிருக ஜீவன்களும், பட்சி வகைகள், ஊர்வன, நீரில் வாழ்வனவும இந்த ஜீவ ஆத்ம அணுவில் உண்டானவை.

3. ஜீவ அணு.

30. இது புழு, பூச்சியாக இருந்துகொண்டிருக்கிறது.

4. அணுக்கள்.

31. ஒவ்வொரு உருவத் தோற்றங்களும், ஒவ்வொரு குணங்களும், சுவைகளும், நிறங்களும், அணுக்களே. இவ் வணுக்களில் 10,0000000000000000 கோடி பிரிவினைகள் உண்டு. ஒவ்வொரு அணுவிலும் இருள், நினைவு, தொனி, ஜோதி—இந்நான்கும் அடங்கி, அதனதற்குரிய விஷயங் களும் அடங்கியுள்ளன. இந்த ஐந்தும் அடங்கியதே ஒரு அணுவாகும்.

அணுக்களைக் காணும் உபாயம்

32. பகல் 12 மணிக்குள் நீர் நிரம்பிய ஏரிக் கரையி லுள்ள மர நிழலில் இருந்துகொண்டு, ஏரிக்கு மேல் சுமார் ஒரு பனை மர உயரத்தில் பார்த்தால், ரசம் பூசிய கண்

ணுடித் துணுக்குகளின் மின்னல் போல $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ அங் குல அகலத்திலும், 2 முதல் 3 அங்குல நீளத்திலும் நெளிந்து போராடும் பல கோடி அணுக்களைக் காணலாம்.

33. மெய்யுணர்வாளர்கள் நிலாக்காலங்களில் நிழ லில் இருந்துகொண்டு, நிலாவின் வெளிச்சத்தை நோக்கி உணர்வைக் கவனித்தால் சிறிது நேரத்தில் அணுக்கள் பெருங் குழப்பத்துடன் வேப்பம் இலையைப்போன்று வந்து வந்து குவிவதுடன் வௌவால்போன்று மாறும். இதனைப் பார்க்கப் பார்க்க மிக இன்பமாக இருக்கும்.

34. இருட்டுக்காலங்களில் தனியாக இருந்து உணர் வைக் கவனித்தால் அங்குள்ள இருள் கூடை கூடையாகக் கிளம்பிக் கிளம்பி அணுக்களின் வெளிச்சம் செஞ்சுட ராய்ப் பின் வெளிச்சமாய்த் தெரிவதுமுண்டு. அப்போது உணர்வு அதிகரிக்கும்.

35. மனித சரீர அணுக்கள் பிரகாச முடையவை; மற்ற சரீர அணுக்களில் கொஞ்சம் கருப்புத் தெரிவ துண்டு.

மகா காரணலோகம்

36. அக்கினி சொரூபமான ஜோதி சொரூபத்தையே மகா காரணமென்பது. இது ஆயிரத்தெட்டு மலருக்கு அடிப்படையா யுள்ளது. இதற்கு மூலம் நினைப்பே; நினைப்பின் உருவமே அக்கினி அல்லது ஜோதி.

37. பரம ஜீவ ஆத்ம அணுக்களுட்பட ஏக எல்லா அணுக்களும் ஆகியதும், ஆகப்போவதும், ஆகி மறைந்த தும் இவ்விடமே.

38. பரமஜீவ ஆத்ம அணுவாலிணைந்த மனித ரூபங் கள் காரண சூக்குமதேவ லோகங்களைக் கடந்து சரீர லோகத்திற்கு வந்து அநேக பிறவிகள் எடுத்து தன் அனு பவங்களை யெல்லாம் தவத்தில் செல்வத்தால் யாதொரு குறைவு மில்லாமல் அறிவின் பெருக்கத்தால் முடித்து 1008 மலரையும் தாண்டி இவ்வக்கினி சொரூபத்தோடு ரூபங் கலந்து ஜீவனுகிய ஆதியோடு சேர்ந்து கொள்ளு கிறது. இதற்கு ஜீவரூப ஐக்கிய முக்தி எனப் பெயர்.

இந்த ஜீவரூப ஐக்கிய முக்தி அடைந்தவரின் ரூபமோ பெயரோ அன்றே அழிந்தது. தமது சபை மெய்யுணர்வாளர்கள் அடையும் ஐக்கிய முக்தி இதுவேயாகும்.

காரணலோகம்

39. மகா காரண அக்கினி சொரூபத்தைச் சுற்றியுள்ள ஆயிரத்தெட்டு மலரின் உள்ளுள்ள இருப்பிடமே காரணலோகம் என்பது. அறிவு பிறப்பது இங்கிருந்தே மகா காரண அக்கினி சொரூபத்திலிருந்து பிரிந்த பரம ஜீவ ஆத்ம அணுக்களாயுள்ள ஆத்மாக்கள் இந்த மலரின் உட்புறத்திலேயே முதலில் தங்குகின்றன.

40. இவ்வாத்மாக்கள் தனக்குச் சூக்குமலோகத்தில் நடக்கவேண்டிய காரியங்களுக்கும், பின் சரீர லோகங்களில் நடக்கவேண்டிய காரியங்களுக்கும் தனக்குள் அருப யோசனையிலே இதில் வெகுகாலம் தங்குவதுடன், மற்ற லோகங்களுக்கும் அந்தந்த காலங்களில் நடந்தேறவேண்டிய காரியங்களுக்கும் அறிவால் பரப்பிக்கொண்டுமிருக்கின்றன. பின்பு காரண சரீர அணுக்களைச் சேர்த்துக்கொண்டு அவை சூக்கும லோகம் வருகின்றன.

41. சரீர லோகங்களிற் சென்று வெகுகாலம் அநுபவித்தவரும், சரியை, கிரியை, யோகத்தில் அறிவின் பெருக்கமுள்ள நல்லடியார்கள், சித்தர்களும், ஆராய்ச்சியாளர்களும், முத்தர் பதவிக்குரியவரும் தமது சரீரத்தை விட்டபின் சூக்கும ஆத்மாக்கள் தேவலோகங் கடந்து இக்காரண லோகத்திற்கு வந்து அணுவில் ஒடுங்கி ஒரே இராக ரீங்காரத்தில் லயித்திருக்கின்றார்கள். இதுவே கடைசி மோக்ஷலோகம். மீண்டும் இவர்கள் சரீர லோகத்திற்கு வரக்கூடியவர்களே. இவ்விடத்தில் நாமும் எத்தனையோ முறை இருந்திருக்கின்றோம். காரண லோகத்திலிருந்து அனுபவித்த சுகமே இப்போது கிடைத்திருக்கும் மேலான மெய்யுணர்வுக்குக் காரணமாகும்.

சூக்கும தேவர்கள் லோகம்

42. இந்த லோகம் ஆயிரத்தெட்டு மலருக்கு இப்பாலுள்ளது, சோதி சொரூப வெளிச்சமும்; அணுக்களின்

வெளிச்சமும், ஆகிய இவ்விரு வெளிச்சத்தின் எதிரொளி யின் வெளிச்சத்தால் ஓர் பரிசுத்த வெள்ளைக் கண்ணாடி யைத் தேங்காய் எண்ணெயில் தோய்த்தெடுத்தால் எப் படியுள்ளதோ அப்படியுள்ளது இவ்வுலகம்.

43. இது 1008 மலரைச் சுற்றி வெகு விஸ்தாரமாக இருக்கின்றது. எல்லா அணுக்களும் காரண லோகத் தைத் தாண்டி சூக்கும லோகத்திற்கு வந்து தங்கியதன் பின் சரீர லோகத்திற்கு வருகின்றன. இந்த லோகத்தி லுள்ளவர்களில் இதுவரை தேக மெடுக்காதவர்களுக்குத் தேவர்களென்றும், சரீரம் எடுத்து சரீரத்தை விட்டு மெய்மறதியாய் அங்குபோய் உறங்குபவர்களுக்கு நல் லடியார்கள் என்றும் அவரவர் குணத்திற் கேற்றவாறு பெயருமுண்டு. இதற்கு மோக்ஷலோகம் என்றும் சுவர்க்க லோகம் என்றும் பெயர்.

தேவர்கள்

44. இவர்கள் ஒரே நற்குணமுடையவராய்ச் சரீர லோகத்தில் சரீரம் எடுக்க ஒரே நோக்கமுள்ளவராக இருக்கின்றார்கள். இவ்வுலகத்தில் நடக்கும் எல்லா நல் விஷயங்களையும் கிரகித்துக்கொண்டும், இங்குள்ள நல்லடி யார்களின் சொல்லையும், செயலையும் கவனித்துக்கொண் டும் இருப்பதுடன், சரீர லோகத்திலுள்ள நல்லடியார்கள் அச் சூக்கும லோகத்திற்குப் போய்ப் பேசும்போது அவ ரவர்களின் பரிசுத்த உடம்புடன் அப்பேச்சைத் தேவர் கள் கேட்பதுமுண்டு. இவர்களது சரீரம் வெள்ளை இள நுங்கின் நிறமுடையது. இத்தேவர்கள் சில சமயம் சரீர லோகங்களில் நல்ல விஷயங்களைப் பேசும் இடத்திற்கு வருவதுண்டு. இவர்களால் நன்மையே ஒழிய தீமை விளை வதேயில்லை. சில சூக்கும திருஷ்டியில் உள்ளோர் இவர் களைப் பார்க்கலாம். ஆனால் நான் அடிக்கடி சூக்கும லோகத்திற்குப் போய் வருவதைப்பற்றிச் சொல்லி யிருக் கின்றேன், மேலும் இன்றும் சொல்லுகின்றேன்.

45. நல்ல உல்லாச பரித்த இடங்களில் மனதை எங்கும் செல்லவிடாத நிலையில் இருந்து ஒரே உணர் வோடு கவனிக்கும் சமயத்திலும், பக்தியைப்பற்றிப்

பேசும் இடங்களிலும், தானே தன் அருளோடு பாடித் ததும்பி யிருக்கும் பரவச சமயத்திலும் இத்தேவர்களுடைய சரீரத்தைப் பார்க்கலாம்.

46. மேலும் நமது மெய்யுணர்வாளர்கள் நெற்றிக் கண்ணால்—தன் மெய்யுணர்வால்—மூக்கு நுனியைச் சுழி முனையால் பார்த்துப் பின் பிடரிக்கண் கூச்சம் ஏற்பட்ட பின்பு மாலை நேரங்களில் இத்தேவர்களைப் பார்க்கலாம். இவர்களைப் பார்த்து விட்டதால் ஞானமடைந்து விட்டதாகாது; ஆனால் நல்லறிவும் தவமும் அதிகமாகும்.

47. தேவர்களுக்கு உலகத்திலுள்ள நல்லடியார்களது உதவி மிகுதியாக வேண்டும். மற்ற நூல்களில் இவர்களைப்பற்றிப் போற்றி எழுதியதற்குத் தக்க காரணங்கள் உண்டு. மேலும் இவர்களை அடிக்கடி பார்க்க முடியாது. ஆயினும் இவர்களைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பமுடையவர்கள் நாற்பதுநாள் முயற்சி எடுத்தால் இவர்களைப் பார்த்துவிடலாம். ஆனால் அவ் விருப்பமுள்ளோர் பார்வைக் குரியவர்களும், அறிவுடையவர்களும், திடசித்த முடையவர்களுமாய் இருக்கவேண்டும்.

48. ஒரு பட்டணத்தை வெகு காலத்திற்கு முன் பார்த்திருந்து பின் போய் அதைப் பார்த்தால் நீங்கள் எவ்வாறு மகிழ்ச்சி யடைவீர்களோ அதைப்போன்றும்; ஒரு நல்ல நண்பர், இனத்தார், நல்லடியாரோடு பழகி உங்கள் நட்பும், அன்பும் அதிகமாயிருந்து, அவர்களை விட்டு வெகுகாலம் பிரிந்திருந்து பின் பார்த்தால் எவ்வாறு உங்கள் உள்ளம் செழிப்புறுமோ அதைப்போன்றும் நீங்கள் தேவர்களைக் காணும்போது உணர்வீர்கள். இதனால் நீங்கள் ஞானமடைந்து விட்டதாகவோ, இவர்களுடைய உருவத்தைக் கண்டு கடவுளைக் கண்டு விட்டதாகவோ கருதிவிடக் கூடாது. தான் நேரே கடவுளுடைய ரூபத்தைப் பார்த்தேன் என்று சொல்லும் ஒரு நல்லடியாரும் பார்த்திட வேண்டும் என்ற நினைப்புடையோரும் ஞானம் அடைந்தவருமல்ல; ஞானத்தைத் தேடக்கூடியவரும் அல்ல; அவர்களது அறிவு எதிலோ சொக்கிக்கொண் டிருக்கின்றது; அது பேரறிவு ஆகாது.

இதில் பக்தியுள்ளவர்களை இப்படிப் பேசும்போதும் அதைத் தடுத்துவிடவும் கூடாது; அவருடைய அறிவு வளர்ச்சியுறும்போது பின் அவரே அறிந்துகொள்வார்.

49. நாமும் இதே தேவர்களாய் இருந்ததும் நம் அறிவிற்குத் தெரிந்திருக்கும்; இல்லையேல் இதோ தெரியப் போகிறீர்கள். இதுவரையில் நான் எழுதிவந்த இந்த விபரத்தை எப்படி அறிந்து உங்கள்முன் சொல்லுகின்றேன் என்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் அடைந்திருக்கும் சத்திய மெய்யுணர்வின் சக்தியே மூல காரணம். இந்த மெய்யுணர்வின் பாக்கியத்தைத் தெரிந்து மிருக்கின்றீர்கள்; இதோ கூடிய சீக்கிரம் தெரியவும் போகின்றீர்கள். ஆனால் இன்றைக்கும் நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன். "நீங்கள் மிக உண்மையில் இருந்து வருகின்றீர்கள் இந்த உண்மை எப்படிப்பட்டதென்று முயற்சியுடன் அறிய மெய்யுணர்வைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்."

சூக்கும லோகம் போக்குவரவு

50. மெய்யுணர்வாளர்களே! உங்களது சூக்கும சரீரத்தைச் சூக்கும லோகத்திற்குப் போக்குவரவு செய்து கொள்வதில் மிக மிக நன்மையுண்டு.

51. சூக்கும லோகம் செல்லும் விதம்:—படுத்து முதுகு பாகத்திலிருந்து சுத்திசெய்த இடத்தைக் கவனித்தீர்களானல் முதுகு வழியாக ஒரு மஸ்லின் துணியை மெதுவாக இழுப்பதைப் போன்று உங்களுடைய சூக்குமம் உங்கள் சரீரத்தைவிட்டு விலகுவது தெரியவரும்.

அனுசரிக்கும் முறைகள்

52. கொஞ்சம் தித்திப்புச் சாப்பிட்டுக் கொள்வதும், அன்றிரவில் சாப்பிடாதிருப்பதும், க்ஷவரம் செய்துகொள்வதும், சிறு தலையணையோடாவது அல்லது தலையணையில்லாமலாவது படுப்பதும், மல்லாந்து படுப்பதும், வலது கால்மேல் இடது கால் இருப்பதும், இடது கை கீழும் வலது கை மேலும் இருப்பதும் மிக உத்தமம். அதனோடு உடல் முழுதும் துணியால் போர்த்துக்கொள்ளவும் வேண்டும்.

53. நிச்சப்தமான இடத்திலும், இருட்டுத் தனியறையிலும், தரையிலும் படுப்பதும்; பஞ்சு மெத்தையில் படுப்பதும்; சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொள்வதும், அப்படி இருப்பதிலும் கை கால் இரண்டும் மேற்கண்ட முறையில் இருப்பதும் சாலச் சிறந்தது.

54. இதனை நாளடைவில் பழகிக்கொண்டால் உங்கள் சௌகரியத்திற்குத் தகுந்தாற்போல் போய் வரலாம்.

55. இதனைச் சூக்கும அப்பியாசிகளும் செய்வதுண்டு. ஆனால் அவர்கள் சூக்கும லோகத்திற்கு மட்டும் போகமுடியாது. சரீரலோகத்தில் சில இடங்களில் செல்லவும் சில சாமான்களை அவர்கள் எடுக்கவும் கதவுகளைத் திறக்கவும், வெகு தூரத்திலுள்ளவர்களைக் கூப்பிடுவதும் போன்ற சில வேலைகளைச் செய்யப் பழகிவருகிறார்கள். இந்த விதமாக நீங்கள் அந்தச் சூக்குமத்தை எக்காரணத்தை முன்னிட்டும் ஏவிப் பழக்கக்கூடாது. இச்சபை மெய்யுணர்வாளர்களுக்கு இது கண்டிப்பான கட்டளையாகும்.

56. மேற்கண்ட சூக்கும அப்பியாசிகள் அப்படித் தாறுமாறாக ஏவுகின்றபடியால் அவர்களது மேனி மெலிந்தும் ஆத்மசக்தி குறைந்தும் போகின்றன. நமது பழக்கம் அப்படி ஒன்றும் செய்யாது.

57. சூக்குமம் நமது உடலைவிட்டு விலகி இருப்பதை நாம் நிச்சயமாகத் தெரிந்துகோள்ள கீழ்க்கண்ட விபரங்கள் இருக்கவேண்டும்.

(1) தேகத்தில் ஒரு சந்தோஷ சிலிர்ப்புடன் மின்சார சக்தி கூச்சம் இருக்கும்.

(2) சூக்குமத்திற்கும் சரீரத்திற்கும் உள்ள தூரம் எவ்வளவாயினும் சரி, சூக்குமம் ஸ்தூல சரீரத்தைப் பார்த்துக்கொண்டே தான் இருக்கும்.

(3) அப்படிச் சூக்குமம் பிரிந்திருக்கும்போது சூக்குமத்திலிருந்து ஒளிக்கிரணங்கள் பாய்ந்துகொண்டே இருக்கும்.

(4) சூக்கும லோகத்தில் நடக்கும் விஷயங்கள் உங்கள் சொந்த அறிவிற்குத் தெரியுமேயொழிய மற்ற வர்க்குத் தெரியாது.

இதனுடைய நன்மைகள்

58. உங்களுடைய சூக்கும அணுக்கள் தீவிரமான பக்குவமடைகின்றன; மேலும் சூக்குமலோக இரகசியங் கள் தெரிவருகின்றன; இன்னும் உங்கள் வைராக்கியத் திற்குத் தீவிரமான தூண்டுதல் கொடுக்கின்றது. உங்க ளது சில பிறவிகளையும் அதனால் அறியலாம். மேலும் வெகு நுட்பமான விஷயங்களெல்லாம் மிகத் தெளிவாய்த் தெரிந்துகொள்வீர்கள். நீங்கள் சூக்கும லோகத்திற்குப் பரிசுத்த ஞாபகத்துடன் போவதால் உமது நன்னோக்கத் திற்கிணங்கி அங்குள்ள சூக்கும சரீரத்தார் சரீர லோகத் திற்கு வந்து பிறவி எடுக்கும்போது உங்களது ஞாபகச் சின்னமாய் நன்னடத்தையாய் நடந்துகொள்கின்றார்கள். மேலும் சரீர லோகத்திற்கு வந்து சூக்குமலோகஞ் சென் றிருக்கும் சில குறைபாடுடையவர்களும் மறுபடியும் சரீர லோகத்திற்கு வந்தபோது அவர்களது குறைகளை முடிக்க ஏதுவாயிருக்கின்றது. இந்நன்மை நன்மையிலும் பெரும் நன்மையாயுள்ளது.

59. இவ்வப்பியாசத்தை இரவு 11 மணிக்குமேல் காலை 5 மணிவரை பழகி வந்து இவ்வுண்மையை அறிய லாம். பகலில் பழகக்கூடாது. மாதம் ஒரு முறை அல்லது இரு முறை செய்து கொள்வது மிக உத்தமம்.

60. நிலாக் காலங்களிலும், சிறு இராகத்தொனி யுள்ள இடங்களிலும், வெட்டவெளியாகிய தனித்த இடங்களிலும் சமயம் வாய்த்தபோது சிந்தனைக்குக் கொண்டு வருவது நல்லது.

61. வாயை மூடி நாவு அண்ணத்தை ஒட்டியிருக்க வேண்டும்.

62. அறிவைச் சூக்குமத்தில் பற்றவைத்து முயற்சிக்க முயற்சிக்க சரீரத்தை வைத்துக்கொண்டே சூக்குமத்தால் எல்லாம் நாம் அறிந்து தெளிவடையலாம். பழக்கத்

திற்குச் சிறிது காலம் பிரயாசைப்படவேண்டும். சுத்தி செய்த இடத்திற்குச் சுமார் 3¾ கஜம் அல்லது 1 கஜம் அறிவை விருத்திப் பழகுவதில் சுலபமாய் அறியலாம்.

நீர்

63. மகாகாரண அக்கினி லோகத்திலிருந்து உண்டாகும் அணுக்கள் காரண சூக்குமலோகங்களையுங் கடந்து இப்பால் வந்து நிறைந்து சூடு குறைந்து கனலின் கானலைப் போல இருந்து ஒன்று சேர்ந்ததே நீராகியது.

நீரில் நிலம்

64. நீராய் இருந்த அணுக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து உறைய உறைய நாளடைவில் நிலமாகியது. இதில் கனமான அணுக்களின் விளைவால் கல், பாறை, மலை, இரும்பு, பித்தளை, செம்பு, ஈயம், வெள்ளி, பொன், தங்கம், பச்சை, பவளம், நீலம் முத்து, வைடூரியம், கோமேதகம் முதலியன உற்பத்தியாயின. இவையெல்லாம் சேர்ந்ததே நிலம்.

65. இப்படி உண்டானவை இந்தபூமி ஒன்றுமட்டும் அல்ல. அங்கங்குள்ள அணுக்கள் ஒன்று சேர்ந்து எத்தனையோ உலகங்களாயும் நட்சத்திரங்களாயும் இருந்துவருகின்றன. சரீரங்கள் இருக்கும் இடத்திற்குத் தான் சரீர லோகங்கள் என்று பெயர்; நமது சரீரலோகத்திற்குப் 'பூமி' என்று பெயர்.

நட்சத்திரங்கள்

66. சரீரம் இல்லாத லோகங்களுக்குத் தான் நட்சத்திரங்கள் என்று பெயர். இந்நட்சத்திரங்களும் மற்ற சரீர லோகங்களும் நமது பூமியைவிட அளவுக்கு மீறிய பெரியதாகவும் சிறியதாகவும் இருந்துவருகின்றன. நட்சத்திரங்களாயும், மற்ற லோகங்களாயும் கூடியுள்ள அணுக்களின் குணங்களுக்கேற்றவாறு இவைகளுக்குப் பெயருமுண்டு.

27 நட்சத்திரங்கள்

67. ஆயிரத்தெட்டு மலரிலுள்ள குணாதிசயங்களெல்லாம் இந்த 27 நக்ஷத்திரங்களில் அடங்கி ஒன்றன்பின்

ஒன்றாக எல்லா சரீரலோகங்களின் மத்திபமாய்ச் சுற்றி வருகின்றன. இவற்றின் நுட்பங்களும் கால அளவுகளும் சரியாகக் கணிக்கத் தெரிந்தவர்கள் உலகத்தில் பிறக்கும் மனிதர்களுக்கும் மற்ற நடவடிக்கைகளுக்கும் விவரங்கள் எழுதிவிடுவார்கள். இந்த நட்சத்திர அணுக்களுக்கும், மனித சரீர ஆத்ம அணுக்களுக்கும் மற்றவைகளுக்கும் தொடர்புண்டு.

நெருப்பு

68. மகா காரண அக்கினியின் வெப்பும், அணுக்களின் வெப்பும், உலக நட்சத்திரங்கள் சுற்றிச் சுழலும் வேகத்தால் உண்டாகும் வெப்பும் நெருப்பு என்னும் பதத்திற்குரியது. இது எங்கும் வியாபகமாய் உள்ளது. இது அரூப அணுக்களிலும் அறிவணுக்களிலும் அதிகமாக அடங்கியிருக்கின்றது.

காற்று

69. பூமி உருவத்தோற்றமாகி இணையும் அணையும் ஆகிவிட்டதால் அணுக்களின் வேகம் அல்லது அணுக்களின் அலைகள் இதில் மோதுவதனால் காற்று என்னும் பதத்திற்குரியது. வெகு உயரத்தில் இந்த அணுக்கள் நிம்மதியாய் ஒன்று சேர்ந்த இடத்தில் காற்றிலலாமல் இருக்கின்றது. அணுக்களின் சுழலால் வேகத்தால் சூறாவளி, சுழற்காற்று உண்டாகின்றனவே யொழிய வேறொன்றும் காற்று என்ற உருவத்தில் தனியாக இல்லை. காற்று என்பது அணுக்களின் அலையேயாகும்.

ஆகாயம்

70. ஆகாயம் என்பது வெட்டவெளியே ஒன்றை அறிவில் தீர்க்கமாக முடிவு தெரிந்துகொண்டால் அதையும் வெட்டவெளி என்று சொல்லலாம். வெட்டவெளியின் அம்சம் என்னவென்றால் ஒன்றுமில்லா இருளின் தோற்ற நிறமே. அது பச்சை; ஊதா போன்று தெரிவதற்குக் காரணம் உலகங்களிலுள்ள வெளிச்ச வெப்பமே.

71. வெட்ட வெளிக்கப்பால் ஒன்றுமில்லை. கடவுளுமில்லை—குற்றமுமில்லை—மற்றெதுவும் இல்லையென்று

சொல்லி அறிவைத் தெரியாதவர்கள் ஞானிகள் என்ற பெயரை வைத்துக்கொண்டு [illegible] விடுகிருர்கள்.

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

72. ஆகையால் அறிவுடையவர்களே! இவ்வகையில் மிக விழிப்புடன் இருக்கவும்.

சூரியன்

73. மகா காரண அக்கினியின் வடிவத்தில் எத்தனையோ கோடி பாகத்தில் ஒரு சிறு பாகத் தோற்ற வடிவமே சூரியனுகத் தெரிகின்றது. இதனை விளக்கிச் சொல்வதென்ருல் இது மாகாகாரணத்தின் ஒரு சிறு முகப்பாகும். பூமி சுற்றுகின்ற வேகத்தால் மகா காரணத்தின் ஒரு மிக மிகச் சிறிய பாகமே சூரியனுகத் தோன்றுகின்றது. சூரியன் என்ற வடிவம் தனியாகவோ அநேகமாகவோ கிடையாது. அந்தந்த உலகங்கள் சுற்றும் வேகத்திற்குத் தக்கவாறு பெரிதாகவும், சிறியதாகவும் தெரிகின்றது.

74. ஆதியின் ஏக்கம் அக்கினியாக மாறி அதிகரித்துக்கொண்டே வருகின்றது. ஆகையால் நட்சத்திரங்களும் இன்னும் புதிதாகப் பல தோன்றவும் செய்யும்.

75. இந்த வெப்பின் விளைவே பாம்பு, மற்ற உயிர்ப் பிராணிகளின் விஷமாய் விளைகின்றது. மற்றும் நஞ்சு, பாஷாணம், வீரம், பூரம் முதலிய விஷங்களும் உற்பத்தியாகின்றன. இச் சூரியனின் வெப்பம் குறைந்த பாகங்களிலே உள்ள விஷ ஜீவ ஜந்துக்களுக்கு விஷ சக்தி குறைவே.

76. இதைப் போன்று சரீரத்தில் தவ உருக்கக்கனல் உள்ளவர்களுக்கும், மூலக் கனல் உள்ள தவக் குருக்களுக்கும், சொல்லில் விஷ சக்தி உண்டு. அதனுல் குருக்களிடத்திலேயோ மற்ற பெரியோர்களிடத்திலேயோ சத்தியத்திற்கு மாருக நடக்காதீர்கள்.

77. மற்றுஞ் சிலருக்குக் கண்களிலும் இவ்விஷ சக்தி அதிக முண்டு. அதனுல் அவர்களது கண் திருஷ்டி பட்டவுடன் பல கோளாறுகள் உண்டாவது சகஜம். அப்பேர்ப் பட்ட உடல் சம்பந்தமான கோளாறுகளை அறிவுடை

யோர் அந்த திருஷ்டி பட்ட இடங்களில் தன் கண்ணுல் 5 நிமிஷம் கூர்மையாகக் கண்ணை இமையாதபடி திருஷ்டி அதன்பேரில் வைத்தால் அக்கண் திருஷ்டியின் கோளாறு கள் நீங்கிவிடும். ஒரு தடவையோ அல்லது மூன்று தடவையோ பார்த்தால்போதும் கண் திருஷ்டியுள்ள கண்ணுடையவாகளுக்கு நீங்கள் குறை சொல்லிவிடக்கூடாது. அதற்குக் காரணம் அவர்களல்ல. அவரது கண்களிலுள்ள விஷ சக்தியேயாகும்.

சந்திரன்

78. இப் பூமிகள் தோன்றி வெகு காலத்திற்குப் பின்பு இது தோன்றியது. இது சாந்தமான உபயோகத்திற்குரிய அணுக்களின் சேகரமாகும். பூமிகளின் அபிவிருத்தி அதிகமாகியபின் காரண லோகத்திலிருந்த அறிவின் ஏக்கத்தால் இது இணைந்துள்ளது. இந்த சந்திரனும் பெரியதாகும். நமது பூமி பெரியதாகிய -பின் அந்தந்த சமய உபயோகத்திற்குத் தக்கவாறு மேலும் ஒன்று அல்லது இரண்டு சந்திரன்கள் தோன்றும். இச் சந்திரனுல் உலகிற்குப் பெரும் நன்மைகள் உண்டு. தவத்திற்கும் நன்மைகள் உண்டு. சூரியனது பெரும் வெப்பத்தை வாங்கி பெரும் சாந்தத்தைக் கொடுக்கின்றது. சந்திரன் இவ்வுலகத்திற்குப் பெரும் சாந்தத்தைத் தரும் ஓர் உபகருவியாகும். இதைப் போன்று மற்ற உலகங்களிலும் பல உண்டு. ஆகையால், உலக நல்லடியார்களே! பெரும் பிரகாச அறிவின் பெருக்கத்தைத்தேடி சாந்தமான நிம்மதியை அடைய் முற்படுங்கள்-

79. பூரணச் சந்திரனில் நாம் காணும் ஒரு சிறு களங்கம், சந்திர வெளிச்சம் பூமியில் எந்த அளவிற்குப் படுகின்றதோ அந்த அளவிற்கு அந்நிழலின் பிரதிபலிப்பே யாகும். மெய்யுணர்வாளர்களே! நிலாக் காலங்களில் நிலா வொளி படாத இடங்களிலிருந்து நிலா வெளிச்சத்தைக் கவனித்தால் தவம் அதிகரிக்கும். நில வொளியில் இரவு ஒரு மணிவரை இருந்தால் பரவாயில்லை. நிலா வெளிச்சம் மேல் படும்படியாகப் படுக்கக் கூடாது; அதனுல் சீதளம் உண்டாகும்.

80. திருமணம், திருப்தி, திருப்புகழ் அறிவின் சிறப்பிற்கே.

அன்பு ஆதரிப்பு, அவசரம் அருளை அடைவதற்கே.

தான தருமம், தயாளம் தவம் தன்னிலையடைவதற்கே.

குற்றமற்ற குணமும், குறை சொல்லா நெஞ்சமும் குருவை யடைவதற்காம்.

நமது பூமி இனி எப்போதும் அழியாது

81. முதன் முதலில் எத்தனையோ முறைகள் இணைந்து இணைந்து, பிரிந்து பிரிந்து, அழிந்து அழிந்துதான் பின்பு இப்பூமி கூடியது. அப்படி கூடிய பூமி இப்போது ரூபத்தில் பெரியதாகிவிட்டதால் இனி இது இன்னும் பெரிதாகுமே யொழிய சிறியதாகவே ஆகாது. ஏன்? வான் நட்சத்திரங்கள் அறுந்து விழுவதைப் பார்த்திருக்கின்றீர்கள். அந்த நட்சத்திரங்கள் அறுந்தவுடன் ஒரு சிறு பிரகாசம் நமக்குத் தெரிவதுண்டு. அந்த நட்சத்திரம் பல அணுக்களின் சேர்க்கையால் இணைந்துள்ளது. அது அணுக்களின் கூட்டம் குட்டின் அதிகரிப்பால் பிரிந்து கொண்டதேயாகும். பிரிந்த அணுக்கள் தன் சுழலின் சுழலால் மற்றோரிடத்தில் ஒன்றோடொன்று கூடிக்கொள்வதுமுண்டு. அப்படியும் இல்லையேல் அதன் அருகிலுள்ள நட்சத்திரங்களோடாவது அல்லது பூமிகளோடாவது சேர்ந்துகொள்வதுமுண்டு. ஆகையால் இப்பூமியோ, இதற்குப் பெரிதாயுள்ள பூமிகளோ இனி அழியா. சிறிது அழிந்து பெரிதில் சேருமேயொழிய பெரிது சிறிதாகவோ, அழியவோ காரணமில்லை.

82. மேலும் ஒவ்வொரு அணுக்களிலும் ஏக்கம் இருப்பதால் தனி விளைவும் இதனுள் உண்டு. ஏக்கத்தின் வேகத்தால் அநேக அணுக்கள் உற்பத்தியாகின்றன. நம் பூமியில் பூகம்பமோ மற்ற அபாயமோ ஏற்பட்டு சில பிரிவுகள் ஏற்பட்டபோதிலும் பிரிந்து மேலே சென்ற அணுக்கள் பிரிந்த 90 நாட்களுக்குள் மீண்டும் பூமியோடு வந்து சேர்ந்துகொள்கின்றன.

சுவை, தோற்றம், பிணி தோன்றுவதும், மறைவதும்

83. நட்சத்திரங்கள் அறுந்து விழுவதால் அந்த நட்சத்திர அணுச்கள் பூலோகத்தில் வந்துசேர்ந்துகொள்வதனுல் புது சுவையான வஸ்துக்களும் சிற்சில வியாதிகளும் திடீரென்று தோன்றுவதுண்டு. முன்னுள்ள காய், கனிவர்க்கங்களின் சுவையும் தோற்றமும் மாறுவதும் உண்டு. அநேக குணங்கள் இணைந்துள்ள அணுக்களின் கூட்டமே ஒரு நட்சத்திரமாகும். இந்நட்சத்திரங்களும் பூமிகளும் சுற்றிக்கொண்டிருப்பதால் பூமியினருகில் சில நட்சத்திரங்கள் வரும்போது நட்சத்திரங்களின் குணங்கள் பூமியில் சாருவதுடன் அதனுல் சில மாறுதல்கள் உண்டாவதுமுண்டு.

84. இதே காரணத்தால்தான் மருந்துகள் பல நோய்களுக்குத் தீர்க்கமாகச் செய்து முடித்தாலும் அதே மருந்து அதேநோய்க்கு மறுஒரு காலத்திற்குப்பின் பயன் படுவதில்லை. அன்றியும் அநேக அணுக்களின் சேர்க்கையே ஒரு உடம்பு. எல்லோருடைய சரீரமும் ஒரேவிதமாயில்லை அதற்குக் காரணம் ஒவ்வொரு உடம்பிலும் அநேக அணுக்களின்மாறுதல்கள் உள்ளன. ஆதலால் ஒருவருக்கு உள்ள ஒரு வியாதியைதீர்க்கும்ஒருமருந்துமற்றொருவருக்கு அதேகாலத்தில்அம்மருந்தால்அதேவியாதியை தீர்க்க முடியாது. அதற்குக் காரணம் முற்கூறிய நட்சத்திரங்களின் குணங்கள் பூமியில் சாருவதும், மனித சரீரத்தில் உள்ள பல பாகுபாடு உள்ள குண அணுக்களேயாகும். அதனுல்தான் காலங்களுக்குத் தக்கவாறும் மனித உடம்பு குண அணுக்களுக்கு தக்கவாறும் ஆராய்ந்து மருந்துகள் செய்து முடிக்கவேண்டும். அறிவின் விசுவாசம் இருந்தால் காரிய கருவி மருந்து எதுவானுலும் நோய் தீரும்.

85. ஆகையால் மெய்யுணர்வாளர்களே உங்களின் அன்பில் விசுவாசம் எங்கும் இருந்துவரும்.

அழிந்து தோன்றுதல்

86. பூமிகள் தோன்றி, அதில் மனிதன் தோன்றி மனிதர்களுக்கு அறிவின் அபிவிருத்தி ஏற்பட்டதின் பின் அறிவில் பார்த்த தோற்றங்களெல்லாம் அம்மனித அறி

வில் பதிந்திருப்பதால் சுமார் 2000 வருஷங்களுக்குப் பின் முன்போலவே அழிந்த தோற்றங்கள் தோன்றிவிடும். மனிதன் இறந்து மறைந்தாலும் அம்மனிதனில் இருந்த காரண அறிவணுக்களில் பதிந்த தோற்றமெதுவும் மறைவதில்லை. அதுபோலவே ஒருவர் முத்திநிலை யடைந்திடபோதிலும் அவரிடம் அநுபவித்த அறிவின் பிரகாச அணுக்கள் அழிந்துவிடாமல் பின் அப்பதவிக்குரியவரிடம் பிரகாசிக்கின்றன; அவை தேகம் உள்ளபோதே நம் அறிவில் பார்த்த சிற்சில விஷயங்களைப் பலவருஷங்களுக்குப்பின் அந்த ஞாபக சக்தியால் முன்போன்றே செய்து முடித்து விடுகின்றோம். அதேபோன்று அநேக சரீரங்களில் அறிந்து பதிந்த விஷயங்கள் பல வருஷங்களுக்குப்பின் தானாகவே தோன்றி விடுகின்றன. உருவத்தோற்றம் ஒன்றேயானாலும் பார்க்கப்பட்ட பலரின் அறிவில் பதிந்திருப்பதால் மறுபடியும் தோன்றுவதற்கு காரணமாயிருக்கிறது.

87. ஒரு ஆலம் வித்தினுள் உள்ள ஏக்கம் எவ்வளவென்பது அந்தஆலமரத்தின் தோற்றத்தில் தெரியவரும். பல ஏக்கத்தின் விளைவே பல பிரம்மாண்டமான ரூபங்கள் உண்டாகின்றன. அதைப்போன்று மனித சரீரம் நாம் எடுத்ததும் பெரும் ஏக்கத்தாலேயே. இதையெல்லாம் அறிந்துவிடவேண்டும் என்ற பெரும் நன்னோக்க ஏக்கமே ஞானம் எனப்படும்.

88. ஆகையால் நல்லறிவைத் தெரிந்து கொள்வதற்கும் பெரும் ஏக்கம் வேண்டும் என்பதற்கு அநேக தக்க காரணங்களை எடுத்து விரிவாகக் காட்டலாம். ஆனால் இதுவே போதுமென்று நினைக்கின்றேன்.

உலக தோற்றங்களின் உற்பத்தி

89. நீர் நிலமாகிய பின் சுவை, குணங்கள் அடங்கிய அணுக்கள் ஒவ்வொன்றின் கூட்டமும் புல், பூண்டு, மரம், செடி, கொடி முதலியனவாக விளைந்து சோலைகளாயின. இதில் அறிவு ஓரே சுவைக்குரிய அறிவாய் அமைந்து ஓரறிவு எனப் பேர் கொண்டது.

90. முதன் முதலில் ரூபத் தோற்றத்தில் அணுக்களின் திரத்தால் இயற்கை உடம்பெடுத்தது வண்டே.

இது கருப்பு நிறமுடையது. இதன் ரீங்கார சப்தம் மிக இனிமையுள்ளது. அங்குள்ள பூக்களையும் சுவையான கனிகளையும் அனுபவித்து வண்டுகள் அதிகமாயின. இதிலிருந்து கசியும் மலஜலத்தாலும் பூமியிலுள்ள வெப்பத்தாலும் சில புழு பூச்சிகள் உண்டாயின. இவைகளின் உற்பத்திக்கு வண்டின் ரீங்காரமே காரணமாகும். இந்த புழு பூச்சிகளுக்கு நகரக்கூடிய சக்தி ஏற்பட்டதனால் இவை ஈரறிவுயிர்கள் எனப்படும். இந்த வண்டுகள் வெகு காலம் இருந்து வந்தன. இப்பவும் இருந்து வருகின்றன. இது எங்காவது சரீரத்தைப் போடும் வழக்கமில்லை. இயற்கையாய்த் தோன்றி இயற்கையாய் மறைந்து விடுவது இதனுடைய சகஜம். இதற்குப்பின் தற்போது இயற்கையாய்த் தோன்றக்கூடிய பொருள்கள் அநேக முண்டு. உதாரணம்:—கொசு, வண்டு முதலியன. இவைகளிலிருந்துதான் பறவைகளும் மிருகங்களும் உற்பத்தியாயின.

மனித ரூபத் தோற்றம்

91. ஆதியில் ஒரு சரீரத்தை வைத்து அதற்கு மேலான அறிவணுக்கள் அதற்குட் புகுந்து அவ்வுருவத் தோற்றத்தைப் படிப்படியாக மாற்றிக்கொண்டுவந்தன. பின் சேர்க்கையால் பெருகியும் கொண்டன. இப்படியே மனித சரீரமும் அநேக சரீரத்தில் அறிவணுக்கள் புகுந்து புகுந்து அவ்வுருவங்களை மாற்றிச் சித்தரித்து வந்ததேயாகும். இதிலும் அறிவு படிப்படியாக மேல் நோக்கி வர வெகு காலம் சென்றது. பின் அறிவின் விருத்தியால் அறிவு வளர்ச்சியும் சீர்திருத்தமும், நல்லது தீயது என்றறியும் சக்தியும் ஏற்பட்டன. அறிவில்லாத காட்டு மனிதரான பள்ளியரை இன்றும் காணலாம். இவர்களாய் இருந்துதான் பின் அறிவுள்ள மனிதர்களாயினர். ஆத்ம அணுக்களாய் இருந்த குரங்கிளிலிருந்தே மலைப்பள்ளியரும் உண்டாயினர். அம்மலைபள்ளியரில் பரம ஜீவ ஆத்ம அணுக்கள் குடியேறியே அறிவுள்ள மனிதர்கள் ஆயினர். அதனால் குரங்கே தான் மனித ரூபமாகி விட்டதாகக் கருத்தன்று. மனித ரூபங்கள் ஆவதற்கு அநேக உருவங்கள் உப கருவிகளாக இருந்துள்ளன. குரங்கு ரூபத்தைக் காரிய கருவியாக வைத்து காரண அறி

வணுக்கள் அதனுள் நுழைந்து ரூபத்தைப் படிப்படியாக உயர்த்தி வந்திருக்கின்றன. அறிவணுக்கள் மனித ரூபத்தை அழகாய்ச் சித்தரித்த பின்னர்தான் பரம ஜீவ ஆத்ம அணுக்களாய் இருந்த தேவர்கள் மனித ரூபத்தில் குடியேறினார்கள்.

92. அணுக்களின் சேர்க்கையால் எந்தெந்த ரூபங்கள் உண்டாயினவோ அவைகளால் அவ்வுருவத் தோற்றங்களே பரப்பப்பட்டன. உதாரணமாக முதலில் சுண்டெலியே எலியாகவும், எலியே பெருச்சாளியாகவும், பெருச்சாளியே கீரியாகவும், கீரியே நரியாகவும், நரியே நாயாகவும் உண்டாயின; உண்டாகின்றன. ஆனால் மேலினமான உருவம் அதற்கு மேலான உருவ மாறுதலையடையுமே யொழிய கீழின உருவமாக ஒரு போதும் ஆகாது. ஆயினும் மனிதனைப் பிறந்த தன் பின் அறிவின் உயர்வு தாழ்வுக்குத் தக்கப்படி மனிதனாகவே பிறந்து அவரவர் அறிவுக்குத் தக்கவாறு அனுபவித்து முடிக்கிறார்கள். அறிவின் இலாப நஷ்டம் மனிதனுக்கே யொழிய மற்றவைக் கல்ல.

மனிதன்

93. அறிவு மனித ரூபத்தைச் சித்தரித்து பரம ஜீவ ஆத்ம அணுக்கள் இந்த ரூபத்தில் வந்து குடியேறிய பின் அறிவு உடனே அபிவிருத்தியாகி விடவில்லை. இந்த மனித ரூபத்திலேயே அறிவு விருத்தியாவதற்கு வெகு கால யுகங்களாயின. மனித ரூபங்கள் அதிகமாகப் பரவிய பின் அறிவு படிப்படியாய் உயர்வாகி வார்த்தைகளும் உடைகளும், இருக்குமிடங்களும், எழுத்தும், படிப்பும் அலங்கரித்து அபிவிருத்தியாயின. அதுவரையிலும் பக்தியோ, தவமோ, தவாலயங்களோ கிடையாது. அறிவின் அபிவிருத்திக்குப்பின் தான், அந்த ரூபத்திற்கு மனிதன் என்று பேருண்டானது.

94. இவ்வறிவின் அபிவிருத்திக்கு வேண்டியவைகளை உண்டாக்கினவர்களையும், அவ்வப்போது அதனைச் சீர்திருத்தியவர்களையும் பெரியவர்கள், என்றும், அறிவாளிகள் என்றும், தீர்க்க தரிசிகள் என்றும், பேர் கொண்டனர்.

பின் இவைகளை எல்லாம் அனுபவமாக அறிவில் தெரிந்தவரே ஞானிகளாகின்றனர். அப்படி உண்டான சீர்திருத்தங்களும் வெகுகால அளவில்தான் உண்டாயின. உண்டான சீர்திருத்தம் குறைந்து விடுவதில்லை. குறைவு ஏற்படும் காலத்து வேறொருவரால் அதிகத் தெளிவாகச் சீர்திருத்தப் படுகின்றன. அறிவு அபிவிருத்தி யாகியபின் பரம ஜீவ ஆத்ம அணுவாயுள்ள மனிதன் பெரும் அறிவாளியாகியும் அவனுடைய ஆசாபாச குணங்களால் மற்றோர் பிறவியில் ஒரு சிறு அறிவுடையவனாகவும் வரலாம். ஆனால் மனிதனாகவே பிறக்கின்றான். அறிவின் ஏற்ற இரக்கம் அவனுடைய ஆபாச காரணமே யொழிய ஏகாக்கிர சக்தியுள்ள அந்த சக்தியின் காரணமாகாது. உதாரணம்:—பெரும் உயர்வான ஆகார உடைகளை அனுபவித்தவன். லாப நஷ்டத்தால் விலை குறைவான ஆகாரங்களையும் ஆடைகளையும் அனுபவிக்கலாம். அதேபோன்று தான் பெரும் அறிவாளியாக இருந்தவன் ஆசாபாசத்தால் அறிவின் நஷ்டத்தால் மறு பிறவியில் சிறு நிலைமையிலும் வரலாம். ஆகையால் தான்;

95. "மதி யுடையாரை
 மதியாத மடையனும்
மதியுடையாரிட மண்டியும்
 மதவிருத்தி செய்யாத மடையனும்
மதியுடையாரிட மண்டியும அவரை
 மதிப்பில்லாது பேசும் மடையனும்
மறுபிறவியில் மனிதனாய்ப் பிறந்து
 மாடுபடாப் பாடுபடுவான் தான் பார்"

என்று கூறி யிருக்கின்றேன்.

96. இதற்கெல்லாம் காரணம் இவனே; இவனுடைய அறிவே. இம்மாதிரி பரம ஜீவ ஆத்ம அணுவாயுள்ள மனிதன் அநேகமுறை இவ்வுலகிற்கு வந்து அனுபவிக்கின்றான்.

97. ஆகையால் அறிவுடையவர்களே! அறிவின் முற்போக்கு அவசியம் வேண்டும். அறிவின் அபிவிருத்திக்குப் பல தடைகள் ஏற்படுவது சகஜம். மதமும், சிநேகிதர்

களும், இனஜன பந்துக்களும், இன்னும் பல தடைகளும் இருந்து வரலாம். ஆனல் எல்லோரையும் வெறுத்து அறிவின் அபிவிருத்தியை அடைந்துவிட முடியாது. வேகமாய் ஓடும் நதியில் விழுந்த ஒருவன் நதியை எதிர்த்து நீந்தாமல் நதியின் போக்கிலேயே நீந்தினுல் கரை சேரலாம். அதைப் போன்றே தன் இனத்தோடு ஒட்டி வாழ்ந்து அவர்களுக்கு வேண்டிய சமாதானத்தோடு அறிவை அபிவிருத்தி செய்து கொள்வது மேல்.

98. ஒரு மனித ஆத்மாவுக்கு அறிவினுடைய அபிவிருத்தி உண்டாக இருபத்தோராயிரம் வருஷம் செல்லுகின்றது. அறிவினுடைய அபிவிருத்திக்குப்பின் அறிவின் சாமர்த்தியத்திற்குத் தக்கவாறு வயதைக் கூட்டவோ குறைக்கவோ அறிவிற்குத் திறமையுண்டு. அறிவின் அனுபவமே வயது.

99. ஆதியில் நாம் பரிசுத்தமாகவே இருந்தோம். பின் சுகம் அனுபவிக்கும் ஏக்கத்தாலேயே இவ்வுலகம் உருவாக்கி உருவானோம். பின் தன் பிரகாசம் தனக்கே தெரியாமல் தத்தளித்து அநேக மார்க்கங்களில் ஈடுபட்டதன் பயனே உண்மை உணர்வடைந்தோம்; உணர்வடைந்தீர் இது ஒரு பெரும் பாக்கியமே. இப்பாக்கியம் எப்படிப் பட்டதென்ருல் தன்னைத்தான் அறிந்து மேலான உச்சியில் ஜோதி விளைந்து திரண்டு முகம் சுடராய் அருளுடன் அறிவுடையவராய், விளங்கி சுயம் பிரகாசத்துடன் ஐக்கியமாய்க் கலப்போம்—கலப்பீர்; இது நிச்சயம்.

100. மெய்யுணர்வாளர்களே! உங்கள் ஒற்றுமைக்கு என் இருதயம் மிக சந்தோஷம் அடைகிறது. இவ்வொற்றுமையில் அன்பும், அறிவும், அருளும் கருவின் கடந்த ஞானதவமும் கூடி ஒன்றுபட்டுள்ளது இவ்வுலகில் இது ஒன்றே. உணர்வு ஓங்க! ஒற்றுமை ஓங்க! ஓங்குக நிதானம். சமாதானம். சந்தோஷம்.

சந்தோஷம்.

———

மூன்றாவது அத்தியாயம்

ஒருமொழி

அண்டமும் பிண்டமும் நிறைந்து அணுவியாய அனைத்திற்கும் இருப்பிடமா யிருக்கின்ற நிலையில்-இருளில்-பர வெளியில். இரண்டற்ற நிலையிலிருந்த நினைப்பாம்-ஆதி, அநேக காலமாய், கால அளவில்லாமல் மறதியாய்க் கிடந்ததன் பின் நினைப்புக்குச் சலனமேற்பட நினைவுண்டாகி, மறதி தெளிந்து விழிப்பேற்பட்ட நினைவே, நினைவாய், நினைக்க நினைக்க, நினைவின் தன் சக்தியே நிரம்பியதொரு தொனி தன்னைச் சூழ்ந்து கொண்டிருக்க, அதுவே அதுவாய், அதுவே அறிந்து ஆனந்த-மும் ம் ம்-என்ற சோக ராக மோகமான முழக்கத்தால், சூடாய், சுழலாய், சுழலின் வேகத்தால், தானே தான் சொரூபமாக ஆகியபின் (பரஞ்சோதியில் பார்க்க) அசைவாய், ஆட்டமாய், ஆடலாய்ப் பாடலாய், ஆனந்தமுழக்கமாய், அங்கிங்கெங்குமாய், ஏகமாய், நிறைந்த ஓங்கார சப்தமாய், அன்று முதல் இன்றுவரை இனி எப்போதும் ஓயாது; கூடிடாது, குறைந்திடாதிருக்கும் மொழியே, நமது திருமொழியாம் ஒரு மொழி.

2. நிறைந்திருக்கும் பூரணத்தில் நினைக்கும் நினைப்புக்கும், ஆடல் பாடலுக்கும், அதற்குரிய ஆனந்தமோகத்திற்கும், மேளதாள இராகத்திற்கும், முன்னும் பின்னுமாய் உள்ளது நமது திருமொழியாம் ஒரு மொழி.

3. கலிமா, தாரக, ஊமை எழுத்தென்னும் அலிப் லாம்மீம்-அகரா உகார மகார, எழுத்தாய் எண்ணாயிரங் கோடி நூல்களாய் விரிந்ததும், ஒவ்வொரு எழுத்திலும் நிறைந்து அதற்குரிய குணத்திற் கேற்றவாறு தொனித்துக் கொண்டதும், விரிந்தது எவ்வளவோ, அவ்வளவும் ஒரு சிறு கண்ணுக்குத் தெரியாத, அணுவளவில் அடங்கியதாயும். எழுதிய எழுத்துக்கும் எட்டாததாயும் எழுத்திற்கு உள்ளும் புறமும் நிறைந்து வருகிறது எதுவோ அதுவே நம் திருமொழியாம் ஒருமொழி.

4. ஒரு வித்தின் குணம் மரமெல்லாம் நிரம்பி இருக்கின்றது போல, ஒரு மொழியின் முழக்கம் எல்லா லோகங்

களிலும் நிறைந்திருக்கின்றது. நமது சத்திய மெய்யுணர்வின் சக்தியால் நம் சரீர அணுக்களெல்லாம் நற்பதவி அடைந்து கொண்டன. உங்கள் சரீரத்தைப் பார்த்தவர்களுடைய குணங்களும் நற்குணங்களடைந்து வருகின்றன நமது,-உங்களின் ஐக்கியத்திற்கு முன்னும், பின்னும், லோகங்கள் எல்லாம் ஒரே முழக்கமாய்ப் போற்றக் கூடியனவாய் இருக்கின்றன.

5. வேதங்களிலும் மற்ற நூல்களிலும் நம்ஒரு,மொழி ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும் கடலைப் போல் கருக்கொண்டிருக்கிறது. கடலில் கப்பலாலும் மற்ற கருவிகளாலும அடித்துக் கலக்கக் கலக்க அலைகள் அதிகமாமாகுமே யொழிய, அமர்ந்து விடாது. கைகளும கருவிகளும் கருத்தும் ஒய்ந்து விடுவதைப் போன்று, நமது ஒரு மொழியைப்பற்றி எழுதிய கருத்து இருந்த ஸ்தூலங்களும், ஸ்தூலத்திற்கு ஆதரமாய் இருந்த பேனுக்களும், ஏடுகளும், அநேகம் எழுதியும் ஒய்ந்துவிட்டன. இன்னும் எழுதிக் கொண்டேயும் வருகின்றன. இனியும் எழுதவும் போகின்றன. எதைப்பற்றி? நமது திருமொழியாம் ஒரு மொழியைப் பற்றி.

6. மேலும, வேதங்கள், கீதங்கள், மற்ற நூல்கள் எல்லாம், நீர் நிரம்பிய குளங்களை-கடல்களை அடித்துக் கலக்கினதைப் போலப் பலவாறு எழுதியிருப்பதால் நமது பிறவியை முடிக்கவிடாமல் இருந்த அணைக்கரைகளை நம் ஒருமொழியின் அலைகளினுல் மோதி இடித்து, குறையாயிருந்த பள்ளங்களில் அருள்நீர் நிரப்பி பெரும் பதவியைத்தேடி இச்சபையில் வந்து சேர்ந்தீர்கள். சேர்ந்ததன் பயனுய் ஒருமொழியை உணர்ந்தீர்கள். கருவின் இருப்பிடம் அறிந்தீர்கள். கண், முக்கண்ணுங் கடந்த கருத்தால் ஞானத்தையும் அடைந்தீர்கள். எதனுல்? ஒரு மொழியின் முழக்கத்தால், ஆகையால் நமது ஒரு மொழிக்குமேல் மறுமொழி இல்லவே இல்லை.

7. உலகத்தில் மனிதர்கள் இறக்கும்போதுநல்லடியராயும், மனைவி மக்கள் சுற்றத்தார், பொருள்கள் முதலியன இருந்தும் அவைகளில் பற்றுதலில்லாதவர்களாயு மிருந்தால், அவர்களுடைய சூக்குமம் சிறிது நாட்கள் வரை இச்

சரீர லோகத்திலேயே இருந்து, பின்னர் சூக்கும லோகத்திற்குச் சென்று, (ஆதியும் உலக இணைப்பும் பாரா 42 பார்க்க) தன் சூக்கும சரீரத்தைத்தண்ணீரில் ஊறினஒரு சப்ஜாவிதை அளவில் அடக்கி-அடங்கி ஒரே முழக்கமான நமது ஒருமொழியின் இராகத்தில் லயித்து, சுகமாய் இருக்கிறது. இந்த ஸ்தானத்திற்குத்தான் சொர்க்க லோகம் அல்லது மோக்ஷ லோகம் என்று பெயர். அப்படி சூக்குமத் தேகத்தில் இருக்கும் ஆத்மா அந்த ஒருமொழியின் ராகச் சுவையில் இரண்டாயிர வருஷ காலம் இருந்தாலும் அதை விட்டு வெளிவர விரும்பாது. ஆயினும் அது தன் சொந்தமான, ஆதியிடம் போகாமல் இருப்பதால், இப்போது நீங்கள் அடைந்திருக்கும் ஐக்கியப்பதவிக்கும், அதற்கிடையில் அனுபவிக்க வேண்டிய பிறவிக்கும் நமது ஒரு மொழியின் அனுபவங்களை அநேக வருட காலம் அனுபவித்திருப்பதால் தன் காரியங்களை முடிப்பதற்கும், சௌகரியமான ஒரு நல்ல இடத்தைத் தேடி, சரீர லோகத்தில் சமயம் வாய்த்ததும் பிறவி எடுக்கிறது. பிறவி எடுத்த பின் நல்லடியர்களாகி இவ்வுலகில் போற்றக்கூடிய நல்ல அறிவுடையவர்களாய் முடிவு தெரிய - ஞானம் அடைய - அவாவுடையவர்களாய் இருப்பார்கள், இப்போது நீங்கள் அடைந்திருக்குப் பெரும்பாக்கியத்திற்கும், நம் ஒரு மொழியின். முழக்கத்தை வெகுகாலம் நீங்கள் அனுபவித்ததன் பயனேயாகையால் இவ்வொருமொழி பெரும் நன்மைக்குரியதாம்.

8. பெய்கின்ற மழைநீரில் எவ்வித அழுக்கும் இல்லை நிலத்தில் விழுந்த பின்னரே அது நிலத்தின் தன்மைக்கேற்ப அழுக்காகி சுவையும் நிறமும் மாற்றமடைகின்றது. அதேபோல் எல்லாருடைய ஆத்மாவும் சுத்தமானதே. ஆயினும் அவரவர்களுடைய குணத்தாலும், அறிவாலும், அநேகவித குறைகளுக்கும் பிறவிகட்கும ஆளாகின்றனர். துர்நீரும் சூரிய வெப்பத்தால் சுத்தமாகிப்பின் மழையாகப் பொழிவதுபோல், தம் குற்றத்தைத் தாமே உணர்ந்து, தவக்கனலைக் கொண்டு பிறவியை முடிக்க முற்படுங்கள்.

ருசு நாதம்

9. சரீரத்திலுள்ள இருளின் தொனி ஒன்றும், நாம் சாப்பிடும் உணவுப் பொருட்கள் இரத்தமாய் மாறிந் பிந்

தாகி மூலத்தில் சேர்ந்து கொண்டிருக்கும் மூலத்துவாரத்தின் தொனி ஒன்றும், இருதய இரத்தத்தின் சுழலின்தொனி ஒன்றும், சுவாசத் தொனி ஒன்றும், வெளித் தொனி ஒன்றும் ஆக நம்மில் இருக்கும் தொனிகள் ஐந்து; இவை நொடிக்குமுன் மாறி ஒவ்வொரு தொனியும் இரண்டாகப் பிரிந்து, பத்து விதமான சப்தங்களாகக் கேட்கும். இப்படி கேட்பதைத்தான் எல்லா ஞான நூல்களும் தச நாதம் என்று சொல்லி வருகின்றன. இச்சப்தங்களைக் கேட்க அவாவுடையவர்கள் கேட்டுவிட்டால், இவைதான் ஞான முடிவு என்றும் சொல்லிக் கொள்வர். நம் சபையில் உள்ள மெய்யுணர்வாளர்களில் சிலர் இச்சப்தங்களை எப்போதும் கேட்டுக் கொண்டிருப்பதும் உண்டு. சுமார் இரவு மூன்று மணிக்கு எழுந்து, மெதுவாய்ப் பின் கண்ணைக்கவனித்தால் வெகு சுலபமாய் இச்சப்தங்களைக் கேட்கலாம். நிலாக் காலங்களிலும், நிச்சப்தமான இடங்களிலும், தனித்த அறையிலும் இருந்து கவனிக்கச் சாதகமாகும். இப்படிக் கவனிக்குங்கால் அவரவர்களுடைய மனதை மகிழ்விக்கும் தாளங்கள்—சப்தங்கள் கேட்கும். அப்படிக் கேட்பதால் மனம் சந்தோஷப்படும். சந்தோஷத்தில் ஈடுபட வைக்கும் சமயங்களெல்லாம் சரியாக—சமமாகவே தெரியும். சத்தையே விரும்பும். அசத்தின் குணத்தில் ஈடுபடாது. உடலில் உள்ள அணுக்களெல்லாம் சுறுசுறுப்பாய் உடலைப் பாதுகாக்கும் இன்னும் அநேக நன்மைகள் உண்டாகும். இந்நாதங்களைப் புகழாத வேதம், மதம் பெரியோர்கள் இல்லவே இல்லை. இப்போது சொல்லிவந்த தச நாதத் தொனியை இச்சபையோர்கள் நெருப்பாறு, பயிர்ப்பாலம் தெரிந்திருப்பதால் ("ஞானக்கண்" பாரா. 35 பார்க்க.) அதைக் கவனித்தவுடனே கேட்கக்கூடும், மற்றும் அதன் முடிவும், தொனியின் பொருளும், நீங்கள் அடைந்திருக்கும் திருமொழியாம் ஒரு மொழியே யாகும்.

10. வேகமாய் வேலை செய்யும் இயந்திரங்களிலும் எல்லா ஜீவனுக்குள்ளும் நிறைந்திருக்கும் முழக்கங்களிலும், அடிக்கும் பூஜை மணியின் அலைகளிலும் ஒலிக்கும் ஐங்கார மொழியே நம் திருமொழியாம் ஒரு மொழி.

11. உலகில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு க்ஷணந் தோறும் ஒவ்வொரு மதஸ்தராக இருந்து வருகிறார்கள்.

ஒரு மதஸ்தராவது தம் மதத்தில் ஒரு நாழிகை நேரங்கூட நிலைத்திருப்பதில்லை. ஆகவே, எம்மதத்தையும் எச்சமயத்தையும் இகழாமல் ஏற்றுக்கொள்பவர்கள் அறிவுடையோர்களாவர். மெய்யுணர்வாளர்களே! எல்லாமதங்களும் தேடி வருகிற ஸ்தானம் எதுவோ அதை நீங்கள் அடைந்திருப்பதால் எல்லா மதஸ்தர்களோடும் அன்பாய் இருத்தல் வேண்டும்.

12. உயர்வான ராகச் சுவைகளாலும், உயரிய வாசனைத் திரவியங்களாலும், உற்சாக வெளிச்சத் தோற்றங்களாலும், ஊக்கமுள்ள திடச் சொற்களாலும், உருக்கமான தன் மனோமய தைரியத்தினாலும், அநேக வியாதிகளை போக்குவதுடன் மிகவும் மேலான அறிவினுடைய அபிவிருத்திகளும் உண்டாகும்.

13. சத்திய மெய் உணர்வு ("உணர்வும் தவக்கனலில்" பார்க்க.) அதிகம் ஆக ஆக தன் சரீர அணுக்களும் அதில் அனுபவிக்க வேண்டிய சுகந்தரப் பிறவி அணுக்களும் சத்தான மெய்யுணர்வின் சக்தியால் சரீரத்தை விட்டுவிடாமல் அனுபவிக்க வேண்டியதை எல்லாம் ஆனந்தமாய் அனுபவித்ததும், அணுவினுள் உள்ள நமது ஒரு மொழியில் அருளோடு நிறைந்து ஆனந்த நாத முழக்கத்தால் அதனுள் உள்ள சோதியின் பிரகாசம் 'பளீர் பளீர்' என்ன அணுக்கள் அலையோடு அலையாக ஆகி ஐக்கியம் ஆகுவோம்; ஆவீர்கள் என்ற சந்தோஷம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஓம் ஓம் என்பார், ஓமென்ற சொல்லறியார்;
ஓம் என்ற சொல்லறிந்தால், ஓமே யவராவார்;
ஓம் என்ற சொல்லறிந்தால், ஓமில்லா இடமில்லை;
ஓம் என்ற சொல்லறிந்தபின், ஒன்று மிச்ச மில்லையில்லையே.

சந்தோஷம்.

Printed at the Rajan Electric Press, Madras. 5—46.

2390
R65

பரஞ்ஜோதி மஹான் அருளிய

"எந்நூலுக்கும் இந்நூலே மூலம்" என்ற

உயர்ஞான நூல்கள்

1. ஒருமொழி.

2. பேரறிவு.

3. பரஞ்சோதி.


4. ஞானக்கண்.

5. ஆதியும் உலக இணைப்பும்.

6. ஆருதாரமும் அமிர்தமும்.

7. பூதலோகம்.

8. உணர்வும் தவக்கனலும்.



அச்சில்:—

1. நடந்ததெல்லாம் நன்மைக்கே.

2. சந்தோஷம்.

நம் சபை புத்தகங்கள் கிடைக்குமிடம்

பரிபூரண பரஞ்சோதியின் உயர் ஞான சபை

1. 1. மேல வடம் போக்கித் தெரு, மதுரை.
2. 33, கும்மாளம்மன் கோவில் தெரு, தண்டையார் பேட்டை, சென்னை.
3. ஷை சபை, பெரம்பூர்.
4. நெ. 30. நம்மாழ்வார் செட்டித் தெரு, சூளை.
5. ஜஸானு பவான் மட்டுங்கா, பாம்பே 19.
6. கிழாத வீதி, சொக்கலிங்கபுரம், அருப்புக் கோட்டை.
7. ஷை சபை, வெள்ளக்கோட்டை, அருப்புக்கோட்டை.
8. சின்னுளப்பட்டி, மேட்டுப்பட்டி.
9. பெரியகுளம்
10. புதுச்சேரி.
11. வேலூர் N. A.
12. காஞ்சிபுரம்
13. காக்கிநடா, (ஜெகன்னுதபுரம்)
14. பரிபூரண பரஞ்சோதி கம்பெனி 34, கார்ப்பரேஷன் புரூட் மார்க்கெட், சைனுபஜார் ரோட், மதராஸ்.
15. விழுப்புரம்.
16. சேலம்.
17. பாளையங்கோட்டை.

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

Wrapper Printed at Rathnam Press, Madras, Q. Ms. 86/